உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கடவூருலா

திருக்கடவூர்

ஸ்ரீ சுப்பிரமணிய கவிராஜ மூர்த்திகள்

இயற்றியருளியது.

இஃது

இந்நூலாசிரியர் பௌத்திரர்

திருக்கைலாய பரம்பரைத் திருத்தருமபுரவாதீனம்

திருக்கடவூர்

அ. சாமிநாத ஓதுவார் மூர்த்திகளாற்

சென்னை

மஹாலட்சுமி விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1917.

ஸ்ரீ சரபோஜி சரசுவதி மஹால் ... தஞ்சாவூர்.

FOREWORD

Ula is one of the ninety-six "prabanthams" in Tamil, which along with kalambagam, anthathi, pillai tamil and kovai is included in the syllabus for the beginner in the study of Tamil literature. This kind of poetical composition is classfied under the broad divisions of thodar - nilai - cheyyul with a continuity of action running through the whole work, and of virundu a piece with a new theme. The metre of the poem is nerisai-kali venba. The subject matter of an Ula is as follows. A youthful hero of noble birth full of the glory arising from meritorious and mighty deeds, goes through the city on a procession with all the paraphernalia pertaining to his position and greatness. Ladies of all ages throng at the sides of the streets to see the procession. The women between the years of five and forty-two are divided into seven kinds according to age; and one from each stage of life is represented as hurrying to look at the beloved hero. Her mental experience at the sight of him is described. The work as a whole is a study of the growth of woman's personal graces and psychic faculties. The evolution of the woman's attitude towards the object of her love, her emotional and social life, her ideals, her associations, her occupations, her recreations are all brought forth with vividness and fidelity to nature. The main topic of the poem is of course, the hero, his greatness and his valour. If the Ula is in honour of God, it treats of His majesty and His manner of salvation. Some of the masterpieces of this kind are the canonical Ula of Seramanperumal Nayanar, a divine and unique poem, the Ula of Irattayar, the twin poets, an inspired poem, and the historical Ulas of Koothan exhibiting wonderful poetic skill. Minakshisundaram Pillai's Thiruvidaimaruthur ula is the elaborate and finished jewel of a great and dextrous literary workman. Some others are chaste, simple and brief. Thirukkadavur ula belongs to this last kind.

The author of this book, Subramanya Kavirayar was a native of Thirukkadavur., His other literary offsprings are Thirumayilaikovai, Thirumayilai anthathi both referring to Mylapore, Thirukkadavur-puranam and Thirunallatruppuranam. He belongs to the othuvar sect of vellalas. His family is a well-known and respectable one, whose members are the hereditary chanters ot the Tamil Vedas in the local temple of immortal fame. He had two sons, one SomasundaraSwamigal took up the orders and was ordained a thambiran, the other Amirthalinga Oduvar was ordained to tend the sacred fire of home The latter left two sons. Swaminatha Othuvar, the elder, combined the work of a guru in the Board school of the village with his hereditary work in the temple Kumaraswami Othuvar, the second, left Arumuga Othuvar, who follows on the wake of his uncle as a teacher and chanter.

The Ula was written about 80 years ago. The author, besides being a man of letters, was an attractive and humorous speaker. His poems bear the marks of a careful writer with a delicate ear. Their rhythm is melodious and their diction dignified and pure. The poet not only composed his works along the lines of the old classics and grammars, but besprinkled them with the doctrines of his sect. Bhakthi to guru, God and saints, the characteristics of Pati, pasu, and pasam are treated in a judiciously brief but clear way.

Some days ago. M. R Ry. Swaminatha Othuvar avl. came to me for bringing the ula out in the vehicle of print. When I saw that he was taking efforts, too strenuous for his age of 63, I could not but undertake to help him. By complying with his word, I had the fortune to place the book in the hands of students of Tamil and to be nearer to my God's grace. My sincere thanks are due to M. R Ry. C. V. Jambulingam Pillai Avl. of Mylapore who kindly looked after the correction of proofs and printing.

"மாரிமாட்டென் னாற்றுங் கொல்லோ வுலகு."

Shiyali
20-2-17.

P. A. Muthuthahdavaraya Pillai

உ

கள்ளவாரணை துணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கடவூருலா.

சிறப்புப்பாயிரம்.

தரங்கம்பாடி

ம-ா-ா-ஸ்ரீ, ப-அ-முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள்

இயற்றியது

உலாவுறுங் கெண்டை யொளிதிகழ் மரைக்க
  ணுவப்புற வமர்தர மடவார்
குலாவுறும் வதன நேருறக் குடையுங்
  கூந்தலார் மணமருக் கடவூர்
புலாவுறு மென்பு கோத்தணி முக்கட்
  புராரிமால் கொளவுலாப் பனுவ
னிலாவுறு மதிய மென்னவிங் கியற்றி
  நெடும்புகழ் நிலவினன் யாவன். (1.)

வால்புகழ் தழீஇ யப்பதி யுதித்த
வாலிய சுத்தசை வத்தன்
  பால்புரை நீறுங் கண்டியுந் தரித்துப்
பரம்பரற் றொழுதெழுங் குணத்தன்
  மால்கெழு மயக்க மொருவிய சிந்தை
மன்னவர் பலர்வியப் புறுவான்
  சால்பினன் சுப்ர மணியனெ னுமத்
தடம்புயக் கவிவலான் மாதோ. (2.)

  அன்னநல் லுலாவை யச்சரங்கேற்றி
யனைவரும் படிப்பதற் கிசையப்
  பன்னுறுங் கீர்த்தி பெற்றவ னன்னுன்
பாலகன் சோமசுந்தரற்குக்
  குன்றெனப் பின்னர்த் தோன்றிய அமுர்த
லிங்கவேள் குலவிய மதலை
  மன்றகம் பரவுஞ் சுவாமிநா தேந்த்ரன்
மறைதனை யோதுவா ருனே. (3.)

வெண்பா.

ஆதியுலாப் பெற்ற வமலன் றிருக்கடவூர்
நாதனுலாத் தானிங்கு நல்கினு—னேதுபுகழ்ச்
செல்வ வனத்தான் றிருச்சுப் பிரமணிய
வில்வ வனத்தான் வியந்து. 1.

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
திருநள்ளாறு மடபதியும் இந்நூலாசிரியர் தம்பியுமாகிய
திருப்பனந்தாள்
ஸ்ரீமத்-சிதம்பர சுவாமிகள் இயற்றியது.

அமுதத்தினை விழைவுற்றொரு பகலிற்சுர ரசுரப்படை
யணையுற்றதி யில்மத்தெனு மலைமீதே
யரவக்கயி றெனவைத்ததி விசையிற்கடை பொழுதிற்கடை
யனவொற்றெழு காளத்துயிர் நலியாதே
வமரர்க்கருள் விமலர்க்கொரு மனுவைச்சொலி யதினுட்பொரு
ளவர்பெற்றிட வருளிச்செய்த குருநாதா
வடியர்க்கருள் புரியப்பனை நிழலுற்றிரு சடையர்க்குமை
யவளுக்குள மகிழச்சிறு மகவாகி
அசுரர்க்கிளை மடியக்கயி லயிலொட் டிமயவர்க்கருள்
செய்துத்தம குணதீரா
அறிவிற்கறி வெனநிற்பினு மறிதற்கரிய தோர்மெய்ப்பொரு
ளகுதிப்படி யுருவத்தொடு மயின்மீதே
கமலத்திரு வதனச்சிறு பவளக்கனி யிதழ்பெற்றொளிர்
கனிமெச்சிட வருமற்புத வடிவோனே
கவலைப்படு மனம்விட்டொரு கணநிற்பத நினைவைக்கொடு
கவிசெப்பிட வரமெற்கருள் முருகோனே (1)

கனககிரியோ துலங்கு மமுதகுடமோ சிறந்த
கமலமுகையோ சிவந்த யிளநீரோ
கருதரியயோகி நெஞ்ச மனன்மெழுகதாக வெந்து
கரையவொரு வோபொதிந்த சிமிழோமால்
மனதுடைய பேர்கள்வந்து பரவிநிதமே வணங்கு
மதன கொலுபீடபிம்ப வரையோவென்
மகுடமுடியோ சுருங்கு விடையொடியவே வளர்ந்த
மதகரிகளோ விரண்டு முலைதானே
வினவுரிசை மாதர்கொங்கை யிணையதெனவே யணைந்து

மதில்வருவதான துன்ப மறியாதே
விஷி துங்கரிகனிந்து பரவுபிளவூடமுந்தி
மடியுமது போல்விழுந்து மடியாதே
யுனதடியர் பால்விளங்கு முபயசரணார விந்த
மடியன் மனதாரவென்று தருவாயோ
வொளிரு மணிமாடவண்ட முகடளவியே நிறைந்த
பனசையினில் வாழ்வுகந்த முருகோனே. (2)

சித்தத்திற்குத் துக்கத்தைச் செய்தத்திக்கிச் சைப்பட்டெட்டுத்
திக்குட் பற்குப்பற்கஞ்சி யொருகோடி
துத்தியத்தைத்திக்கச் செப்பிதுத்துக்கெட்டு சுத்தச் சித்தத்தைச்
சிற்றுப்பட்டென்று வசை பேசி
கத்திக்கத்திச் செத்துச் செத்துக் கஷ்டப்பட்டு பத்திப்பைக்குள்
சுட்டுட்டைத்து திக்கத்தொன்று மறியாதே
சுத்தப் பித்தர் கொத்தித்திப் பித்திக்குள் சொக்கத்தைப்
பக்கத்திற்றந்த முருகோனே (3)

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம், திருவாரூர் இராஜன் கட்டளை மடபதியும், இந்நூலாசிரியர் தநயருமாகிய திருக்கடவூர்

ஸ்ரீமத்-சோமசுந்தர சுவாமிகள் இயற்றியது.

1 ஆய்க்கப்பற்குப் புற்கைத் தண்ணீர் கொடார் பணமத்தனையு
பாய்க்கப்பற்குப் புற்றதுபோற் கிடந்த பகிரிணமாங்
காய்க்கப்புக்குப் புக்கிடையார்தமை துதிக்காதருள்வாய்
வாய்க்கப்புக்குட் புறங்காட்டா பனசைவரும் வள்ளலே.

இந்நூலாசிரியர் தநயர், திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீனம்
திருக்கடவூர் தேவஸ்தானம்

ஸ்ரீமத்-அமுர்தலிங்க ஓதுவாமூர்த்தியவர்கள்

இயற்றியது.

வம்பன்வலிடும்பன் வெகு வஞ்சநெஞ்சன் கொடியமாபாவி பொல்லாதவன்
வறிஞனறி வில்லாத முழுமூட னுனதுதிரு வடிமலரைநினையாதவன்
நம்பு விசுவாச மில்லாதவன் செய்திடும் நன்றிகொன்றவனுலுத்தன்
ஞாலத்தினு மண்டகோ ளத்தினுந்தேடின் நானொருவ னல்லாமலே
வும்பர் நரராதியா யெண்ணிறந்திடு முயிர்களிலோ ருயிர்கள் கண்டதுண்
வோகோகிடைப்ப தரிதான பொருள்காணொருவர்கை விடுவார்களோ [டோ
செம்பவள மேனியான் மைந்த வெனை விடிலுனைச் சிறுபிள்ளை யென்று
[சொல்வார்
தென்கடவை யம்பதி தழைந்திடவளர்ந்த ருள்செய்சிங்கார வடிவேலவா.

உ

கள்ளவாரணத் துணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கடவூருலா.

காப்பு.

நேரிசை - வெண்பா.

மருவுலா வுங்கடவூர் வாழும் பெருமான்
றிருவுலா விண்ணப்பஞ் செய்யக்—கிரிமரபி
லிக்குஞ் சரக்கன்றே யென்னுமொழி யீன்ற
கைக்குஞ் சரக்கன்றே காப்பு.

நூல்.

தலவிசேடம்

நீர்பூத்த பூவில் நிலாவுந் திருமுயங்கு
1 மேர்பூத்த பூணுகத் தெங்கோனுந் — தார்பூத்த
வண்ணக் கிரீட மகபதியும் விண்ணவரு
2 மெண்ணற்ற தானவரு மெய்தியே — மண்ணிற்
சிறந்தபா லாழி சிதறக் கடைந்து
3 பிறந்தவமு தங்கடத்திற் பெய்து — மறந்தவிர
நல்குமிட மீதென்று நாடித் திரள்வில்வம்
4 புல்லும் வனத்திற் புடைபோந்து — மல்கு
மமுத கலசத்தை யாங்கிருத்திக் கீழ்பாற்
5 குமுதத் தடமொன்று கோலி—விமலமா
மப்புனலுண் மூழ்கி யமரர் முதலெவரு
6 மொப்பி லமுதகடத் தூடணுகிச்—செப்பியிடு
மாங்கவரிற் கார்மா லணைவோரு முண்பதற்கு
7 வாங்கி யமுத மகிழ்ந்தெடுப்ப—வோங்கி
இலிங்க வுருவா யிலகி யவர்க்கு
8 நலங்கொ ளமுதம் நயந்து—பலன்பெறுமா

லெண்கா னுகரு மியல்பு தருமிறையோன்
9 பண்கால வேயூதும் பவனத்தான்—மண்கானு
மண்ணல் மனமுருகி யாயிர மாண்டளவு
10 மெண்ணில் விரத மினிதாற்றி—நண்ணி
யரக்கர் பெரும்போரு மாகியு மன்றே
11 துரக்க வரமுதவுந் தொல்லோன்—விரத்தியரில்
வால கிலியர் கபிலர் மறைவகுத்த
12 சீல வியாசர்முதற் சீரியோர்—சால
மருவி யருள்கூர வந்தித்தருச் சிப்பக்
13 கருவகற்றி யாங்கவரைக் காப்போன்—பிரவஞ்ச
வாழ்க்கை யருவருத்து மாயாத பேரின்ப
14 வேட்கை யுவந்து மிகுந்தறிவில்—வாழ்க்கைநக
மூந்தும் விசாலை யணிநகரி லோர்வணிக
15 னிந்த்ரநிக ரத்னா கரனென்போன்—வந்து
தெரிசித்து மூன்று தினம்வைகி யாங்குத்
16 துரிசற் றுடலந் துறப்பப்—பரிவுற்று
தன்னுருவ மீந்து தனதுலகி லேகுதற்கு
17 மின்னும் விமானம் விரைந்துதவி—யன்னோன்பால்
வேடன் பகழியால் வீழு முழுவைக்குங்
18 கூட விமானங் கொடுத்திட்டோன்—நீடு
மிருகசிப னீன்ற மிருகண்டன் மேனா
19 ளொருமைந்த னின்றி யுயங்கி—யருமந்த
பூசனை யன்பிற் புரிய மனமகிழ்ந்து
20 பேசுமீ ரெட்டுப் பிராயத்தில்—மாசற்ற
போத மிகுந்த புதல்வன் றருகுவமோ
21 வாதனோ யார்கோடி யாயுள்பெறுங்—காதலனை
யீயவோ கூறென் றிசைப்ப வதுகேட்டுத்
22 தூயசிவ ஞானத்தின் சூழ்ச்சிதனை—யாயவரும்
நன்மகவு தாவென்று நாடி யனையமுனி
23 புன்மை யகலப் புகலவே—யன்ன
வரமீந் தருளி வரத்தினா லந்த
24 வுரவோன் மகிழ வுதித்து—விரவிய

மார்க்கண்டன் வில்வ வனமகிமை யைக்கேட்டுக்
25 கார்க்கண்டந் தீரக் கனிவினுல்—யார்க்கும்
குறையகற்றக் கீழ்த்திசையிற் கூபமுண் டாக்கிச்
26 செறியும் நிருதி திசையில்—வெறிகமழும்
பிச்சிநறும் போதாற் பெரிதுவந்து பூசிப்ப
27 மெச்சிய வன்பால் மிகுந்தகற்றி—யச்சிகரம்
போன்ற மறலி புரள முனிந்தடியா
28 லூன்றி யருந்தவனை யுய்வித்து—மாண்டு
பிறவாது நித்தியமாம் பேறு முதவி
29 யிறவாத வின்பத்தை யீந்தோன்—தறுகட்
சமன்மாளப் பூமான் றளர்ந்து பொறையாற்
30 கமலா சனத்திறையோன் கண்ணுற்—றிமையோர்
பெருமானே யாற்றேன் பெரும்பார மென்னத்
31 திருமால்பா லாங்கவனுஞ் சென்று—பரிவா
லிதனை யுரைப்ப விரங்கி யவனுங்
32 கதமொழியுங் காலங் கருதித்—துதிசெய்து
பின்ன ரியம்பப் பெரிய கரும்பகட்டின்
33 மன்னவ னுய்ய வரமுதவி—யின்னுஞ்
சிவசின்னம் பெற்றுரைத் தீண்டாதே தீண்டி
34 லவசின்ன முன்போ லடையுந்—தவிரென்று
ஞால முழுதும் நடுங்க வுயிருண்ணுங்
35 காலனுக்கு மேனுட் கழறினேன்—சாலப்
பொலிந்த விதேகமாம் பொன்னினகர் மன்னன்
36 சிலம்படுத்த கோமதி தீரத்தில்—பலன்புரிய
எண்ணும் விசுவசித்தி யாக மினிதியற்றி
37 நண்ணு மிரவலர்க்கு நற்றுனம் - பண்ணும்
பொழுதில் விசுவ வசுவாம் புனிதன்
38 முழுது முணர்ந்த முனிவன் - பழுதி
லரச னிளவல் பிரமதியை யன்புமிரு
39 பெரிதினிய கோதானம் பெற்றுப் - புரிவிற்

றனதூரி லெய்துங்காற் றாவிச் சுரபி
40 புனித முனிபாற் புகாமல் - நனியகல
வந்த முனிவ னகம்வெகுண்டு சாபத்தை
41 யிந்தப் பிரமதிபா லெய்தவே - நொந்து
குரவ னருள்பெற்றுக் கோமதி யாற்றங்
42 கரையகன்று கங்கைசூழ் காசி - விரவும்
பருப்பதங்கா ளத்தி பரவியே கம்பம்
43 புரத்திற் சிறந்த புலியூர் - திருத்தோணி
யானபதி வெண்கா டடைந்தன்பிற் சேவித்து
44 வானுயரும் வில்வ வனமேவித் - தானங்கள்
செய்து பவனன் றிசையி லொருபகழி
45 யெய்துந்தூ ரத்தோ ரிலிங்கத்தை - யுய்யும்
பிதிட்டை புரிந்து பெருங்கோ புரமு
46 மதித்திரளும் மாளிகையு மற்றும் - விதித்திட்டு
மாகமுத லீராறு மாக மருந்தேற்றி
47 யாகமத்திற் றப்பாம லர்ச்சிப்ப - ஓகையால்
வன்னவை ரேர்ய வரதன்ன மேவு
48 மின்னற்சா பந்தவிர்க்கு மெம்பிரான் - பொன்னவையி
லாட்டினான் மன்னுயிரை யட்டினா னிம்மூவர்
49 பாட்டினான் வானோரிற் பாட்டினான் - பூட்டிலக
மேருவினைக் கோட்டினான் வெய்யபுரம் வீட்டினான்
50 பூரியர்க்குப் பாசவலை பூட்டினான் - கார்பொலியுங்
கண்டத்தான் கற்றைமதித் துண்டத்தான் மூக்கியவே
51 தண்டத்தான் வேழக்கோ தண்டத்தான் - பண்டெரிய
நோக்கினா னந்துயர நூக்கினான் மூவுலகு
52 மாக்கினா னெவ்வுருவு மாக்கினான் - வீக்கியிடு
மின்பயிலு மேனியான் வேணியா றுய்யவிட
53 முன்பயிலு மன்புடைய முக்கணான் - பொன்பிரிய
மஞ்சு நிறத்தா னனத்தினான் காணாத
54 வஞ்சு நிறத்தா னனத்தினான் - நெஞ்சுலவு

கற்பனையாங் கங்கை கமலத்தா னத்தணியுங்
55 கற்பனையாங் கங்கை கமலத்தான் - பொற்கிரியி
லுற்ற பதங்க வுருவினா ளேரெண்கா
56 லுற்ற பதங்க வுருவினான் - சர்ப்பா
பரணத்தான் வேளைப் பயந்தோனம் பொற்சா
57 பரணத்தான் வேளைப் பயந்தோன் - சரணத்தி
லற்சிக்க மேவி யருள்செய்வோ னம்பாச
58 வற்சிக்க மேவி யருள்செய்வோன் - பொற்பிலக
வாரத் தலகி லணுகினான் காணும
59 லாரத் தலகி லணுகிபவா - னேரி
லரிந்த வனாசாப மகற்றுவான் சோதி
60 விரிந்த முடியரசன் மேனாட் - புரிந்து
மலியும் விழாவயருங் காலத்தில் வானோ
61 ரிலகவிட பத்துவச மேற்றி - நிலமுண்ட
பூவைநிறத் தான் புனிதமல ரோன்முதலாந்
62 தேவ ரெவரும் திரண்டுதின - மேவிக்
குலாவு முனிவோருங் கொண்டாடி யேத்த
63 வுலாவுதிரு நாளி லொருநாள் - நிலாவுசீர்
வீறு படைத்தசிவ வேதியர் பூசிப்பக்
64 கூறும் விதியினாற் கொண்டருளி - யீறிலாச்
சோதி வெயில்வீசத் துன்றுநவ ரத்தின
65 வேதிகையிற் சேவிப்ப வீற்றிருந்து - போதனார்
நாவில் மறவாத நான்மறையு மூவராந்
66 தேவர் நவிலும் திருப்பாட்டும் - மாவழுதி
பூசல் புரியப் பொருள்கவரும் மாணிக்க
67 வாசகர் சொற்றதிரு வாசகமும் - பேசுமுறை
கேட்டு மலந்தீரக் கீதம் பலபாடக்
68 கோட்டும் புருவக் கொடியன்னா - ராட்டயரப்
பண்டிமவான் போற்றப் பருவத் திருவோடுங்
69 கண்டருளி வாளரவக் காப்பணிந்து - விண்டு

நுதலுக் கெதிரென்று நோக்கிச் சடையின்
70 மதியைக் கவுரி மறைக்கும் - விதமுற்றுச்
செய்ததே வன்றித் திரிபதகை தன்கொழுநன்
71 மெய்யிற் றழுவாத வெற்பளிக்கும் - தையல்
புரிந்தவித மோவென்னப் பொன்முடியாற் சோதி
72 பரந்த கிரீடம் பரித்து - விரிந்தரவம்
வெம்மியுணர் வோர்பால் விளங்கும் பரிதியென
73 வம்பொனுதற் பட்ட மலங்கரித்துப் - பைம்பொனிலத்
தேவர் துதியும் திருத்தொண்டர் மெய்த்துதியும்
74 தாவில் முனிவோர்க டந்துதியும் - மேவி
இருவர் கரவீணை இன்னிசையு மென்மேற்
75 பெருகு திருச்செவியிற் பேணி - விரவிற்
கவருங் கதிர்வீசுங் காமர் குழையு
76 மவிரும்பொற் றோடு மணிந்து - குவலயத்திற்
பண்டு முனியும் பயோததியி லாலமெனக்
77 கண்டு விபுதர் கலங்காமல் - மண்டியெழி
லேதஞ்சற் றில்லா திலகு மணிமிடற்றை
78 மாதங்கப் பூணூல் மறைத்தருளி - யாதரவா
யந்திரத்திற் றேவ ரரிபிரம ராதியோர்
79 மந்திரமாம் வெற்பில் வரியரவம் - பந்திக்குந்
தன்மையெனத் திண்டோளிற் றங்க நவரத்ன
80 மின்னவிலக் கேயூர மீதணிந்து - கன்னவிலும்
பொற்பதக்க மோடு புரிநூல் மனங்கவரும்
81 பொற்கிரி மார்பகத் திற்புனைந்து - வற்புற்ற
கொன்றைப்பூ மாலை குவளைப் புதுமாலை
82 மன்றற் பொலிகூ. விளமாலை - துன்று
நவரத்ன மாலை நவசந்த்ர மாலை
83 யிவையத் தனையுமாங் கிட்டுத் - தவிராத
செவ்வா யதரமுஞ் சேர்பவ ளம்போல
84 வவ்வான் பயந்த வணங்கன்னுன் - பௌவத்தி

லால நுகரு மரனார்பா கத்திருத்திச்
85 சீலவரை மார்பிற் சிறந்ததெனச் - சாலக்
கதம்பத்தி லெண்மடங்கு கந்திப்ப வாகந்
86 ததும்பத் திருச்சாந்து சாத்திப் - பொதிந்திலகு
சிந்தா மணியு மிருநிதியுஞ் செம்பொற்பூ
87 மந்தார நேரு மலர்க்கரத்தி - லுந்தித்
திருந்து மணியீன்று சீறு முரகம்
88 பொருந்துங் கடகம் புனைந்து - மருங்குலராக்
கச்சிற் பொலிந்து கவின்கொள்ளச் சேர்க்கலுறுஞ்
89 செச்சைநிறப் பட்டுச் சித்திரித்து - மெச்சிப்பே
ராற்ற லவுண ரழிவதற்கா யன்றுநுகர்
90 பாற்கனுக் கிந்தப் பகிரண்டந் - தோற்றுவிக்கு
மந்த வுதரத் தணிவுதர பந்தனமார்த்
91 திந்த நிலமுதலா மெப்புவியுந் - தந்தருளிப்
போதுலா வுங்கடவுள் போயிரந்து வந்திக்குஞ்
92 சேதுலா வுங்கமலச் சேவடியின் - மீதழகு
கூரக் கனகாவிற் கோலக் கனகமணி
93 வீரக் கழலார்த்து வில்விலக - நாரணனு
மன்றறிய வொண்ணாத வம்போ ருகத்துளமின்
94 மின்றவிழ மேன்மேல் விளங்குமொளி - துன்றியிடத்
துய்ய நவரத்னம் சுற்றும் பதித்திட்டுச்
95 செய்யும் பசும்பொற் சிலம்பணிந்து - பையிற்
கரவா தவிரும் கசிந்துருகித் தேன்கற்றைத்
96 திருவா சிகைமேற் றிருத்தி - இரவகல
வேந்தெழிலிற் றோன்று மிளைஞர் தமைப்போலக்
97 காந்துலகங் கண்ணாற் கண்டருளிப் - பூந்தருநீ
ளங்கண் விசும்பி லமரர் குழாங்களிப்பத்
98 தங்கத் திருவாடு தண்டேறிச் - செங்கனகப்
பொற்பிலகி யந்தப் புயலுலா வைச்சிறந்து
99 பற்பலவாய்ப் பாவை பயிலாத - வற்புதமாங்

திண்சிகர முற்ற திருவா யிலையணைந்து
100 வன்சிகரப் பொற்றேரில் வந்தேறி - விண்பரவத்
துன்றியுவ ணப்புட் டுளங்கவே நெட்டுயிர்க்கும்
101 வென்றியிட பத்துவச மீயோங்கச் - சென்றறியாத்
திக்களவு நீழல் சிறக்கக் கவிக்கும்பூச்
102 சக்கரவா ளக்கவிகை சார்ந்தெடுப்ப - மிக்கமரர்
கண்டு வியப்பக் கனகக் கவின்காட்டித்
103 தெண்டிரையிற் பீலித் திரள்வீச - மண்டியபா
லோத முயர்ந்திலகி யொண்டரள மென்றுபுரள்
104 மாதங்கப் பொற்சா மரையிரட்ட - நாதமிகுந்
துந்துபி பேரி துடிகாக ளந்தொனிக்கு
105 முந்திய வீணை முழாமுதலாய் - நந்திபுரி
மத்தளத் தோடு தடாரி வலம்புரியா
106 ழித்தகைய மேள மெடுத்தொலிப்ப - வத்தியெனு
மூடிகத்திற் றோன்றி முனிவர் பரிவினொடு
107 மாடற் கலாப மதிலேறப் - பாடுந்
தரும்நூல் துளபந் தரித்த பிரானின்
108 திருஞ்சிறைய புள்ளூர்தி யேற - விரிஞ்சன்
றனியெகின மேறத் தவள நிறந்தோயப்
109 பனிவரையிற் றோன்றும் பகட்டின் - முனியும்
வயிரப் படைசேர் மகவா னிவரச்
110 செய்நற் றபனனென்று சேவிற் - பயில
வுருத்திரர்தா மேற வுயர்ந்த விமானத்திற்
111 றிருத்தகு சந்திரனுஞ் செல்ல - விருட்கடியும்
பன்னிருவ ராதித்தர் பல்கு நவரத்னப்
112 பொன்னவிருந் தேரிற் போயிருந்தே - மின்னிற்
றுலங்கு கனலோனோர் சோதிமத மாபோ
113 லிலங்கும் பொருதகரி லேற - விலங்க
லெனப்பணைத்த மேதி யிளம்பகட்டி லாவி
114 தினத்தெவிட்டாக் காலனார் செல்ல - மனத்தறமே
நாட்டு நிருதி நரவா கனமேற
115 வேட்டவரு ணன்மகர மீதேறக் - கோட்டிரலை

மீதிற்கா லேற விளங்குமணி புட்பகத்திற்
116 சோதிக் குபேரனார் தோன்றியே - போதஞ்
சமானம் பகராத் தவம்புரியுந் தக்கோர்
117 விமானங்கள் மீதில் விளங்கச் - சமாலக சுப்
பேரன் சிரமுருக்கும் பெம்மான் றனியகன்ற
118 மாரன் சிறுகான் மணித்தேரை - யூரச்
சுவணச் சிறையுவணத் தோன்றற்கும் வேணித்
119 தவளப் பிறையான் றனக்கு - முவகையாம்
மைந்தன் சுவேத மதகரியின் மீதேற
120 விந்தைகண் டிந்திரனு மீதேறச் - சந்ததமுந்
தீங்கு பிறவே சிவத்துரோ கம்புரியு
121 மாங்கவரை யெல்லா மடவந்தோ - னீங்கு
ஞமலி முதுகேற நன்பொற் றருநாட்
122 டமரர் பலரு மருங்குவரத் - தமர
வரிபாடுங் கந்திருவர் மாகதர்கந் தர்வர்
123 கருடர்சித் தர்கணங் கூடப் - புருட
ரனகூறுஞ் செங்க ணர்க்கரு நாகர்
124 மனமேவு மாகாச வாச - ரினமுன்
ருதியா யெல்லோரு மன்பி லரகரவென்
125 றோதிவே லாவலைய மொத்தொலிப்பக் - கோதில
மணலா லிலிங்கம் வகுத்து மதவனச
126 விணராலர்ச் சிப்பதனை யெண்ணு - துணர்வின்றி
மிண்டுபுரி யத்தன்பால் மேவும் பிதாவின்கால்
127 கண்டஞ்செய் திட்ட கரத்தோனும் - கொண்டா
டனமுயர்த்தோன் போற்று மரன்பாகத் தன்னை
128 யுணமுலைப்பால் வெள்ளத்தின் மாந்திப் - புனையுமதி
கூடற் பதியரசன் கூனிமிர மேனுளிற்
129 பாடற் பதிகம் பகர்ந்தோனு - மீடுரையா
வஞ்சொற் பசுங்கிளியா மற்றோர்பாற் பன்னிக்குச்
130 சஞ்சரிக மாரலைக்குந் தண்டலையில் - மஞ்சுமிக
மண்டியூர் கோளிலியில் மாதேவ ரைப்பாடிக்
131 குண்டையூர் நெல்லுக் கொணர்ந்தோனும் - பண்டுலகிற்

றுய்ய திருநீறு தோன்றப் புனைந்தோரை
132 வெய்யவ ரென்று வெகுள்சமண - ருய்யாமற்
சற்பனை யாய்க்கடலுட் டள்ளித் தனைச்சேர்ந்த
133 கற்புணையா கப்பாடக் கற்றவனு - மிற்றுதியா
வாழ்வு தருவான் மருவிக் குருவிந்த
134 நீழ லுகந்த நிமலன்பாற் - றாழவே
யாறாத மால்கொண் டழுந்துந்தன் கண்ணீர்போற்
135 மாறாமற் பாட்டுரைக்க வல்லோனும் - கூறு
மனுநூல் விதியால் மலைநாடு காத்துப்
136 புனித நெறியே புரிந்து - தனைநிகரு
மூதண்ட கூட முகடளா வுஞ்சிகர
137 வேதண்ட மெய்த மிகவிரும்பித் - தீதகல
விள்ளாகா வாய விமலன்றாண் மேவுவான்
138 வெள்ளானை மீதில் வியந்தேறி - யெள்ளாமல்
முன்றொண்டை வாய்ப்பரவை மோகிப்பச் சோகமுறும்
139 வன்றொண்ட னோடேகு மன்னவனு - மன்று
கரந்து மகவைக் கனிவினில் வெவ்வே
140 றரிந்து கறிக ளமைத்துச் - சுரும்பரின
மார்க்குஞ்செங் காட்டிலகு மத்தனார் சித்தத்துக்
141 கேற்பச் சுவையமுத மீந்தோனுஞ் - சேர்க்கு
மரவா பரண மணியும் பெருமான்
142 கரவா னுரோகஞ்செய் கண்ணில் - வெருவியே
வீங்கும் பரிவாற் றனது விழியிடந்து
143 வாங்கி யணிந்த வனசரனும் - பாங்குபெறு
ஞால முழுது நவின்றேத்துந் தண்டலையில்
144 வாலரியுஞ் சாகினியு மாவடுவுங் - கிலமாய்
மண்டுங் கமரில் மடுப்பக் கரைந்துருகிக்
145 கண்டத்தை யீருங் கரத்தோனும் - விண்டுருகி
யாரிய னுக்கிரவி லாலவா லத்தின்முளை
146 வாரி யனம்புரக்கும் வல்லோனும் - போரிசையும்

வல்லரக்கி தாமம் வனையத் தலைசாய்த்த
147 செல்வப் பனந்தாட் சிவலிங்கம் - மல்கிய
சீரிற் பொலியத் திகையாமற் றன்கண்ட
148 மீரக் கயிற்றினா லீர்ந்தோனு - மேர்பெற்ற
நீறுபுனை யக்கண்டு நேராமற் றன்கரத்து
149 மாறில்படை யோடு மடிந்தோனுங் - கூறு
மினைய ரெவரு மிவர்போலத் தொண்டு
150 புனையுமவ ரும்பரவிப் போத - முனிவகன்று
கைதவ மின்றிக் கருமந் தவறாத
151 வைதீக மேவு மறையோரும் - வெய்தி
னுருக்கு நவநீத முற்று மனுவா
152 லிருக்குங் கபாலத்தி னீக்குந் - திருக்கம்பை
யாறுலா வும்பதியி லன்றபிடே கித்துலகில்
153 வீறுலா வுங்கருணை வேதியரு - மீறில்
பெருமான் சிவாலயத்துட் பெய்திரவி யங்கள்
154 மருவாது கட்டளையில் வைகித் - திருவிழா
வாரா தனையாவு மன்பாக வேயாற்றும்
155 பேராண்மை யுள்ள பெருந்தவனு - மேரான
வில்வ வனமொன்று மேவித்த நாண்முதலாய்
156 மல்குங் கடவூரில் வாழ்வுற்றுச் - செல்வமுறுந்
தானத் தவருந் தலத்தோருந் தக்கசில
157 ஞானத் தமிழ்பாடும் நாவலருங் - கானச்
சுவைதோயும் விஞ்சையருஞ் சொற்ற பரத
158 மெவையு மறிந்தோ ரெவருந் - தவளமணி
சேரும் புளகமுலைச் செங்கட் கிளிமழலை
159 யாரு மொழித்தே வடியாளும் - பாரிலுறு
வெள்ள மெனப்பரந்து மேவியரா வின்முடி
160 துள்ளு மினியெனவே துன்னிவர - வெள்ளிப்
பொருமத னாகம் பொடிபடுத்த வெங்கண்
161 வரியரவம் பூண்டபிரான் வந்தான் - விரதமாய்
மாலாழி நீத்தோன் மகவுக்குப் பால்வளரும்
162 பாலாழி யீன்ற பரன்வந்தான் - சால

மதிக்கு நதிகுலத்தில் வந்தோர் மரபி
163 னுதிக்கு மொருவனும் வந்தான் - றுதிப்ப
வுலகெலா மென்னா முரையென்ற செம்பொன்
164 மலைகுலா வும்புயத்தான் வந்தா - னிலமுழுதுங்
கீண்ட மருப்புடன் கிள்ளும் பல்சிரமும்
165 பூண்ட கனகப் புயன்வந்தான் - றூண்டும்
புரமன் றெரிமூளப் புன்முறுவல் செய்த
166 வரத னருள்கூர வந்தான் - பரவிப்
புகழும் பவளப் புரிசடையான் வந்தான்
167 மகிழுங் கடவூரான் வந்தா - னிகரிலா
வாராருஞ் சூலத்தான் வந்தான் வந்தானென்
168 சீரார் திருச்சின்னஞ் செப்பக் - காராகத்
தேய்ந்த மருங்குற் றிலத மதிற்கவுரி
169 யேய வொருபாகத் தெங்கோமான் - வாய்ந்தவெழிற்
கேதனங்க டன்னக் கிளருமனத் தோட்கடவிச்
170 சோதி மணிமருகிற் றோன்றுதலும் - போதனார்
தங்கு முலகிற் குழாங்கள் புளகமுலை
171 திங்கள் வதனத் தெரிவையருஞ் - செங்கண்மால்
மேவியவை குந்தத்தில் மின்னும் பொன்னிலத்தில்
172 வாவுங் கயற்கண் மடவாரும் - பூவிற்
சிறந்த திருவுந் திசைமுகத்தோன் றங்கும்
173 புறந்தவலக் கோக நகமீ - துறைந்திலகி
யெண்ணெண் கலையு மியற்று மொருஞானப்
174 பெண்ணு மியக்கர் பெதும்பையரு - நண்ணி
மரகத வாள்வீச வண்ணப்பூ ணேந்து
175 முரகர் பதியி லுகந்த - வரிவையரும்
பேதை முதலாகப் பேரிளம்பெண் ணீறாக
176 மாதரையில் வைகும் மடவாருஞ் - சீதநிலாப்
பில்குந் தவளப் பிறைதவழு மாடத்து
177 மல்குங் கனகமணி வாயிலினும் - பல்கிரணப்
பத்திபாயா தெங்கும் பரக்கு நவரத்னச்
178 சித்திரக்கூ டத்துஞ் சிறுதென்ற - லுற்றுலவும்

வேனிலா முற்றத்து மேடையினுங் கோபுரத்தும்
179 பானிலா வெள்ளம் பரப்பதென - வானிமிரு
மண்டபத்து மொண்டரள வண்ண விமானத்துந்
180 தெண்டிரைகள் போலச் செறிந்தீண்டிக் - கொண்டலைக்கண்
டாடும் மயிலினீட் டம்போலா டுங்குயிலின்
181 கோடுஞ்செய் பைங்கிளியின் கூட்டம்போ - லூடு
புரிவா ரெதிர்தர நிற்பார் புரங்கள்
182 திரிவா ருருகி நயப்பார் - கருவிழியாற்
காணா தவர்போற் கரப்பா ரகலாத
183 நாணா பரணம் நழுவுவார் - வேணிப்
புனல்மாது மோர்பாற் பொலிந்த புளகத்
184 தனமாதும் போலத் தரையி - லினிது
பிறந்தோ மிலையென்பார் பெண்பிறப்பி லீச
185 சிறந்தோ ரிவரெனமுன் செல்வார் - மறங்கத்து
மெண்டோளுந் திங்க ளிலகுஞ் சடாமுடியுந்
186 தண்டார் கமழுந் தடமார்புங் - கண்டு
வணங்குவார் வில்வேள் மலரம் பாலாக
187 முணர மிகநெட் டுயிர்ப்பார் - பிணங்குவார்
மாதவர்தம் பள்ளியர்க்கு மால்கொண் டலையுமிவ
188 ரேதின்று நோக்கா ரெமையென்பார் - சீதரனார்
மோகினியா யன்றுவர மோகித் துருகுமிவர்
189 யோகியர்போ லச்செல்வ ரோவென்பார் - மேகலையும்
வண்ணத் தரள வளையு மகன்றயர்வார்
190 சுண்ணமுலை யிற்றினஞ் சுடுவார் - கண்கவர
நோக்குவா ரிங்கு நுவலவார்தங் காத
191 லாக்குவார் போதினா லர்ச்சிப்பார் - தேக்கமிகு
நீரிற் படிந்தாலு நில்லாத காமத்தீ
192 யாரிப் புவிமீதி லாற்றுவரோன் - றேரிலகு
மாதரார் தம்மோ டுரைப்பார் வடியாத
193 காதல்வே லைக்குட் கலங்குவார் - பூதரமாம்
வாகிலணி யுந்தார் மாதேவ ரின்றுதவிற்
194 சோகமிலை யெனவே சொல்லுவா - ராக

முருகி விகாரத்தா லுள்ளந் தளர்ந்து
195 பரிவுற்ற மாதர் பலரி - லொருபேதை

பேதை

சற்று மழலைத் தவளப் பசுங்கிள்ளை
196 சிற்றின்ப நல்குஞ் சிறுபூவை - பற்றி
விலைபகரா மாணிக்கம் வேலைபடா முத்தந்
197 துலையில் நிறுத்துலவாச் சொன்னங் - குலவிப்
பிழியாத செந்தேன் பிறித்தாலைக் கேற்பக்
198 கழியாத மென்மதுரக் கன்ன - லெழுநிலாக்
காணி லுவந்து களியாச் சிறுமஞ்ஞை
199 பாண்வண்டு கிண்டாப் பதுமமுகை - பூணுஞ்
சடாரரமும் வளையுந் துன்னுந் திரையிற்
200 படரா திலகும் பவள - மிடையுமிள
மாவிற் றளிர்கோதி மாமதனன் றன்னைவரக்
201 கூவி யுலவாக் குயிற்பேடு - நாவினுற்
பாலிற் கலந்த பசும்புனலை வேருக்கா
202 தேல நடக்கு மிளவன்னஞ் - சாலவே
யாருத மால்கொண் டகமெலியு நல்லாரைச்
203 சீருத தென்றற் சிறுகன்று - வீறுதரு
பொன்வண்ணம் பூணும் புயத்திளைஞர் தாமிகவுந்
204 தன்வண்ணங் காட்டிற் றளர்வரென - மின்வண்ணக்
காரிற் பொலியக் கரந்து நறுங்காயைச்
205 சோர முடிக்குஞ் சுரிகுழலாள் - போரியற்றி
வாட்டா விழிக்கடையில் வள்ளைக் கொடியழகு
206 காட்டா தணிகுதம்பைக் காதினு - ளீட்டுபுகழ்
ஞாலத்தி லாடவரை நாடி யமர்புரிவோர்
207 வேலொத் திலகு விழியினுள் - சால்புற்ற
வானுறு பொற்றரள மாலை புனையுமுலை
208 பானுறு மின்மழலைப் பண்ணினுள் - தேனுகராப்
புட்குலவும் பிணத்தாள் பொன்முடியும் பொற்கிரியும்
209 வெட்கு மெனவுரத்தின் மீளாம - லுட்கரந்து

மேவித் தவளநிலா விண்டிலகுந் தண்டரளக்
210 கோவைக் கிசையாத கொங்கையாள் - பூவையர்கால்
நீல நிறைவிலகு நீள்கனக நூபுரத்தை
211 யால முமிழு மரவென்பா - ளோலவொலி
யேய்ந்தமக ராலயத்தி னெய்தியெழு ஞாயிறுபோ
212 லாய்ந்தவொளி வட்ட மதுநோக்கி - வாய்ந்தொளிரு
தன்னிழலை யொத்தாள் சதபத் திரவதன
213 கன்னி யிவளென்று காட்டுவா - ளன்னையருங்
குற்றே வலையாற்றுங் கோதை யருமன்றி
214 மற்றோ ருழியின் மருவிலா - ளற்புதமா
வாவி யதனி லரக்காம் பலைநோக்கித்
215 தாவுந்தீ யாமெனமேற் சாத்திலாள் - மேவியே
தூரிகையாற் றீட்டுஞ் சுவணநிறக் கிள்ளைதகக்
216 காரிகையீர் பற்றுமெனக் காட்டுவாள் - வாரிமணற்
சிற்றில் வளைத்துச் செழுங்குவளை மாடமுங்
217 கற்றை நிலாத்தவழ் காத்தலமுந் - தெற்றிகளு
மத்தாணி யும்மா டரங்குஞ் செழுங்கமல
218 வித்தார மென்கரத்தால் வேறமைத்து - நித்திலமுந்
துய்ய மணலுஞ் சொரிந்திட்டுப் பொற்றசும்பிற்
219 செய்ய கதிர்மணியாந் தீயடுப்பிற் - பெய்தினிய
பாலடிசி லட்டுப் பரிவிற் கலம்பரப்பிக்
220 கோலமணிப் பாவையுணக் கூறுவாள் - சேலியற்கண்
மின்னார் புடைசூழ மின்னூ புரமதிரப்
221 பொன்னாரு மேடைப் புறத்தணைந்து - பன்னுந்
தரப்பூவை யாதனக்குச் சொல்வனபோன் மெல்லக்
222 கரப்பூவைக் குப்பயிற்றுங் காலை - யரக்காந்தள்
பஞ்சு நிகரும் பதமா திரமீன்று
223 வஞ்சி யொருபான் மகிழ்ந்திருப்பக் - கஞ்சத்
திருமா லொருபாற் சிறப்பச் சுருதிப்
224 பெருமான் சிரமும் பிணையும் - பொருமழுவுந்
தீயுந் திரிக்குந் திரிசூல மும்மருணந்
225 தோயு முளரி தொறுமிலகக் - காயும்

பிறைநிலாக் கான்று பெருங்கங்கை - யாற்றின்
226 துறைகுலா வுந்தவளச் சோதி - நிறைய
துகிரார் சடிலந் துலங்குமதி யென்ன
227 வயிராருந் தாமம் வயங்கப் - புகல்மறையின்
காரணமா மெங்கோன் கனகமணித் தேர்கடவித்
228 தோரண வீதிக்கட் டோன்றுதலும் - பாரிற்
பொலியு மிளமிழலைப் பொற்கொடியு மாட
229 மலியுந் திருமறுகில் வந்து - நிலமுழுது
மின்றி முனியு மிறையோனை வந்திக்குந்
230 தொன்றிக் கரத்துத் தெரிவையர்போல் - வன்றணியும்
அண்ணல் பதமிறைஞ்சி யந்திப் பிறைதவழும்
231 வண்ணப் பவள வார்சடையுந் - தண்ணளியே
பில்கி யருவிப் பெருகும் விழிமூன்று
232 மல்கும் வெயில்பயக்கும் வண்டோடும் - கல்கலென
வார்க்கும்வே லாவலயத் தாலநிக ழுங்களமும்
233 பார்க்குந் தொறும்வியந்து பாராம - னீர்க்கமல
மன்ன கரத்தி லருணன் றனைநோக்கித்
234 துன்னுஞ் சிறுபூவை சொற்கிள்ளை - யென்னவே
யீது விளையாட வின்றெமக்கு நல்கெனவே
235 கோதையர்பா லாதரவு கொண்டுரைப்பப் - பேதைமையால்
மின்னே யிதனை விளம்பினாய் மூவுலகிற்
236 றன்னோ டொவாதபொருட் டன்மையாய்ச் - சின்மயமா
யாதியாய் நிட்களமா யற்புதமா யெப்பொருட்கு
237 மேதுவாய் நிற்கு மிறைவன்கைப் - போதி
லுழையெமக்கு மேவுமோ வொண்ணுதலே யென்னு
238 விழைமல்கு நல்லா ரியம்பி - மழலையிளம்
புண்டரீக மின்னோடும் பொற்கோயி லுட்புகுந்தார்
239 வண்டு விசித்து விளையாமல் - வெண்டரளம்
கண்ணிலக நீண்ட கழைக்கார் முகமேந்தி
240 வண்ண மதனு மருங்குவர - வண்ணலார்
பொற்று ரிலகப் புனையும்பொற் றேர்கடவி
241 மற்றோர் மறுகின் மருவினார் - கற்றைப்

பெதும்பை

பிறைதிகழும் நெற்றிப் பெதும்பை யொருத்தி
242 நறைவிரிய விண்ட நளின - மறையு
மழலை யகன்றுரைக்கும் வண்ணப்பைங் கிள்ளை
243 பழுதி லெழுதரிய பாவை - பொழியும்
பசும்புயல் கண்டாடும் பச்சை மயூர
244 மிசைந்தாட மிக்க வெகினம் - விசும்பி
லமரர் முதலெவரு மாரா வமுதந்
245 திமிரநிற வண்டுண்ணாத் தேறல் - கமழ
முகைவிரியும் போது முருகுதார் வேய்ந்து
246 தகரம் புழுகுமிகத் தடவி - யகிலாவி
யூட்டி யுருவிலியு முள்ளந் தடுமாறக்
247 கூட்டி முடிக்குங் குழலினாள் - வாட்டரவி
லாயமணிச் சோதி யவிருங் குழையளவிச்
248 சேயரியி னாடுஞ் செறியமுத - நோய்சற்று
முன்னாதவி யத்துயர மூழ்கா தயமருந்து
249 துன்னாதவு கின்ற துணைவிழியா - ளின்மதுர
தண்ணம் பசுந்தேன் றவழு மரக்காம்பல்
250 வண்ணஞ் சிவந்ததுவர் வாயினாள் - வெண்ணிலவின்
பத்தி விரியப் பரந்தமக ராலயத்தின்
251 முத்தினிரை யொத்த முறுவலாள் - துத்தியுறு
பைநாகத் துச்சி பதிய வருவியுகு
252 மைநாக வெற்பு மறிகடலின் - மெய்நாகங்
காணாத வண்ணங் கரந்து புரந்தரனார்
253 சேணாடு புக்க திறங்கேட்டு - நாணமுற
வின்னலாய்த் தன்றலையை யெட்டியெட்டிப் பார்ப்பதுபோற்
254 றுன்னியடிக் கொண்ட துணைமுலையாள் - பொன்னின்
மலரடிக்கு நூபுரமும் வண்ணக் குழைக்கு
255 விலையில்மணிக் குண்டலமு மென்கைக் - கிலகும்
புரிவளையு மோகிக்கும் போதும் புனிதற்
256 குரிய தெனவே யுணர்வாள் - விரதியரிற்

கொக்கோக னாரினிது கூறுமத நூன்முழுது
257 மிக்கோதி னாற்பயிற்ற மேவுவா - ளக்குவளைத்
தண்டாரும் புண்டரிகத் தாருங் கழுநீரில்
258 வண்டாரும் வேறு வகுத்தறிவாள் - விண்டு
நகையவிருந் தாரகையாய் நாடாம னாக
259 முகையை முகையாய் மொழிவாள் - திகழும்
கனவெயிலாற் செய்ய கமல மதனை
260 வனச மெனவே மதிப்பாள் - பனியளக
மஞ்சு தவழ்தவன மாடத்தின் மீதிவர்ந்த
261 விஞ்சையர்வா னத்தார் வியப்பக் - கஞ்சக்
கரமலரிற் பைம்பொற் கழங்கேந்தி மானேந்
262 தொருவன் மறைக்கண்ட மொன்றுந் - திருமால்
புவியிடந்துங் காணாத பொற்றா ளிரண்டு
263 மவிர்மதியுந் தீயு மரியுங் - கவினி
லொளிரும் விழிக ளொருமூன்றுந் திவ்ய
264 நளின மணியகர நான்கும் - வளர்தவளப்
பெற்ற முவந்த பெருமான் றிரிபதகை
265 யுற்ற சடிலமுடி யோரைந்து - மெற்றுதிரை
யோதுங் கடலால முன்னுகர் வோன்சைவத்
266 தோதுஞ் சமயவித மோராறும் - கீதமொழி
தும்புரு நாரதருஞ் சொற்சுவையா கப்பாட
267 வெம்பெருமான் கேட்கு மிசையேழுங் - கொம்பில்
மருவுகுயில் போல மதுரப் பசுந்தேன்
268 பருகு மரிபோலப் பாடி - யருகுதொறு
மேமந்தை வீச விசைந்த மணியவிரக்
269 காமர் கழங்காடுங் காலத்திற் - சோமக்
கலையமுத மூரக் கவின்கொண்ட வேணித்
270 தலைவன் கனகநிறத் தாமன் - குலவும்
பருவப் புயல்வண்ணன் பண்டுபோர் கீண்டு
271 துருவக் கரந்தபதத் தோன்றல் - பெரிய
வரைகளினில் மேம்பட்ட மாதங்க வெற்பி
272 னிரைபுரையு மெண்டோள் நிமலன் - கரதல

மந்தா மரையி லயன்சிரமொன் றேந்தினோன்
273 றந்தா வளத்தின் கருமத்தா - னெந்தாயென்
றேத்துவார் தங்கட் கிறவா வரம்புரப்போ
274 னீற்றணியால் வெவ்வினையை நீக்குவோ - னாற்றக்
கருணைபொழி முக்கட் கடவூரி னாத
275 னருண நிறவண்ணத் தண்ண - லொருமுனிவ
னெக்காலு மீரெண் பிராயத் தினிதிருக்க
276 வக்கால னைச்செற்ற வங்கணன் - மிக்கான
மங்குற் குலந்தவழு மாட மணிமறுகிற்
277 றுங்கத் திருத்தேர்மேற் றோன்றுதலுந் - தங்கச்
சிலையானை நோக்கினாள் சென்றாள்கும் பிட்டாள்
278 தலையால் வணங்கினாள் சற்றே - யுலையின்
மெழுகா யுருகினாள் வேலா வலயத்
279 தெழுஞா யிறுபோன் றிலகி - யழகுதரு
வண்ணத் திருவுருவி லோர்பான்'மகிழ்ந்துறையும்
280 பெண்ணையிவ ளாரென்று பேசினா - ளொண்ணுதலே
மாதவரிற் பிங்கிருடி மாதேவ னைவலஞ்செய்
281 போதிற் றனையகற்றும் புன்மையாற் - சோதி
பனிவரையிற் செல்வி பலகாற் பரவி
282 யினிய தவமியற்ற வெங்கோன் - புனிதமா
மாகத்திற் பாதி யளித்தா னதனாலிப்
283 பாகத்தி லுற்றாளிப் பாவையெனத் - தோகைக்குத்
தாய ருரைப்பச் சகமெங்குந் தானாக
284 மேய தவள விடைத்துவச - னேய
வெழின் முழுது நோக்கி யிரங்கி விரகத்
285 தழல்கவரும் மாதர் தமைப்போல் - விழிகவரப்
பெண்ணணங்கு நிற்பப் பிறைசூடுங் கோடீரத்
286 தண்ணலோர் வீதி யணுகினா - ளுண்ணெகிழப்
பூங்குழன் மாதுதாய் புண்டரி கக்கரத்தாற்
287 றாங்கி யணைப்பத் தணந்திட்டா - ளீங்கொருத்தி

மங்கை.

மங்கைப் பருவ மடமாது மாரவேள்
288 பங்கப் படவளரும் பாலெகினம் - வெங்கனலிற்

பெய்யாத சொன்னம் பிரச மணிபரப்பக்
289 கொய்யா தவிருங் கொழுங்கமலம் - வெய்ய

புருவச் சிலையைப் புருடார்த முள்ள
290 முருவத் தனிக்கோட்டு மோவங் - துருவிச்

சிறுகாலிங் காராத தேறல் குயிற்றுக்
291 குறைவு படாத்தரளக் கோதை - நறியவகி

லூட்டித் தகர மொழுகும் புரிகுழலார்
292 தீட்டிப் பரிமளிக்குஞ் சிந்தூரம் - வாட்டமிகப்

பெற்றுவிர கத்தா விளைஞர் பெருங்காத
293 லுற்றமக ராலயத்துக் கோர்மிதவை - யற்று

விரிந்த கரண மிகப்புனித மாக்கு
294 மருந்தவரை வாட்டு மணங்கு - பரந்துவரி

வண்டாடும் புண்டரிக மாதும் புலோமிசையுங்
295 கொண்டாட வந்த குலக்கோதை - கண்டுவக்கு

நாவியுஞ் சாந்தும் வருடி நவிலுமகி
296 லாவியும் நீவி யளிதவழுங் - காவியொடு

சாதி யிணருந் தமனகமுஞ் சண்பகத்தின்
297 போது மணியும் புரிகுழலாள் - மாதேவன்

கொந்தார் சடையிற் குலவும் பிறைபோன்று
298 சிந்தூரந் தீட்டுந் திருநுதலாள் - வந்தனைசெய்

யங்கண் மகேச னடியா விடையாவெண்
299 டிங்கள் புரையுந் திருமுகத்தாள் - பொங்கியொளி

விண்டலரு மம்பொன் மிகுந்த மணிமகர
300 குண்டலங்கொள் வண்ணக் குழையினள் - மண்டமர்செய்

தன்றுவரு மந்தகனை யண்ணல் வெகுண்டதுபோ
301 லின்று முனியு மிணைவிழியாள் - மின்றவழும்

வித்துருரு மொன்றை மிகுந்த பதப்படுத்திப்
302 புத்தமுத முள்ளே பொலிவித்தா - லொத்திலகு
மையல்வரு வித்து மதனை மலரம்பா
303 லெய்யவரு விக்கு மிதழினுள் - துய்யகதிர்
முத்துந் தளவின் முகையுநறு மாதுளையின்
304 வித்து மெனத்திகழும் வெண்ணகையாள் - சித்தமிகப்
பண்புகலும் வண்டு பயில முகைவிரியும்
305 வண்குமு தந்திகழும் வாயினுள் - தண்பணையின்
வண்ணஞ் சிறந்த வனப்புடைய தோளினு
306 ளெண்ணங் கவர விருமாந்து - சுண்ணம்
புனைந்து மதர்த்துப் பொருகரிக்கோ டொத்துச்
307 சினங்குலவி முத்தந் திகழ - வனைந்தாங்
கருந்தவர்க்கு மாலாக்கி யவ்வேள் சலாமிட்
308 டிரங்கவளர் கொங்கை யிணையாள் - பரந்து
நிலவுந் தியபவள நேர்சடையா னங்கை
309 யிலகுந் துடிநே ரிடையாள் - குலவு
மணியிலகி யோங்குமோர் வண்ணமே டைக்கு
310 ளணியிழையார் தம்மோ டணுகிப் - பணியுலகின்
மன்னன் சிரத்தின் மணியு மரிகரத்தின்
311 மின்னும் வளையீன்ற வெண்மணியுந் - துன்னுந்
திசையரவச் செம்மணியுந் திக்கெட்டு மேவும்
312 புகர்முகத்தின் கோடுட் பிறக்கும் - நகைமணியும்
விண்டு நிலவும் விரவிக் கலந்தெறிப்பப்
313 புண்ட ரிகக்கரத்திற் பொற்பந்துங் - கொண்டு
தகரந்தோய் கூந்தற் சரியப் பிறையே
314 நிகர்நுதலின் முத்த நிரம்ப - விகலின்
மருங்கு லொசிந்து வணங்க வுரங்கொள்
315 குரும்பை யசைந்து குலுங்க - விரிந்த
பொலங்கட கங்கள் புலம்ப விலங்குஞ்
316 சிலம்புக ளென்றுஞ் சிலம்ப - வலைந்து

வருங்கயல் முன்ன மருண்டு முனிந்து
317 பொருங்குழை சென்று பொருந்த - விரும்பிய
செந்தா மரைக்கை சிவப்பத் திருவன்னாள்
318 பந்தாடப் பூவையர்கள் பார்த்துவியந் - திந்தப்
புவியி லுனைப்போற் பூவையர்தா மில்லை
319 யெவருமறி யாருன்போ லீண்டு - நவரத்ன
கந்துக மாடக் கனங்குழா யுன்னருமை
320 யந்தி நிறத்தண்ண லன்றியே - யிந்த
மதியா லறிவதற்கு வல்லமோ வென்று
321 துதியா லரிவையர்கள் சொல்லக் - கதுமெனவே
பொன்னவிரும் வண்ணப் புளகமுலைச் செங்கட்
322 கன்னி மனங்களிக்குங் காலத்திற் - றுன்னும்
பிறையமுத நுண்டிவலை பில்க வதனைக்
323 கறையரவ முண்டு களிக்குஞ் - செறிபவள
வேணியான் பொற்கிரியை மேனாட் டனுவாக்கும்
324 பாணியான் மாதுகந்த பாகத்தான் - றூணிற்
பிறந்த சினமடங்கல் பித்தா யுலக
325 மிறந்து கெடமுனித லெண்ணிப் - பரந்தெண்காற்
புள்ளுருவாய் வந்தட்ட புத்தேள் புவியயின்ற
326 வெள்விடையின் மீதேறி மேவினான் - றெள்ளமுத
பூரணகும் பத்துப் பொலிந்தோன் கடவூரன்
327 றோரண வீதிக்கட் டோன்றுதலும் - வாரிலகச்
செங்கேழ் மணிப்பூண் செறியு மிளமுலையாள்
328 பங்கே ருகக்கரத்திற் பந்திருப்பத் - தொங்கற்
சரிந்து கருங்கொந் தளநெகிழச் சாபம்
329 பொருந்துநுத லிற்றரளம் பூப்பச் - சுருங்கு
மிடைதுவள நூபுரங்க ளேங்க மடவார்
330 புடைவிரவத் தண்மயிலிற் புக்காள் - சடைய
ரெழின்முழுது நோக்கி யிளவண்டு கிண்டப்
331 பொழியு மதுமாலை பூத்த - முழவுத்

திரள்புயமுந் தன்முலையும் பார்த்தா டியங்கி
332 யுருகி மனநெட் டுயிர்த்தா - ளருகிற்
சிலதியரு மன்னையருந் தீஞ்சொற் கிளியை
333 யலமரலென் றாகத் தணைத்துத் - தலைவனா
மெந்தை பிரானுக் கிதனை யியம்பினார்
334 முந்துமறை கட்கு முதலாகி - யந்தத்திற்
கண்ணன் கமலத்தோன் கற்பகநாட் டுக்கரசன்
335 விண்ணமர ரென்பவரை வீட்டியே - மண்முதலா
மைம்பூத முந்துடைக்கு மத்தாவோ வெற்றிதர
336 வெம்போ தகமுரித்த வித்தகவோ - கொம்பனைய
வெங்கண் மடமாதுக் கித்துயர மீங்களித்தீர்
337 மங்கை யரைவெறுக்க வல்லீரோ - பொங்கியளி
யோது முடியி லொருமானை வைத்தீர்மெய்ப்
338 பாதியொருத் திக்குப் பகுந்திட்டீர் - மாதவர்தம்
பன்னியரைக் கற்பழித்தீர் பைந்துழா யெந்தையொரு
339 மின்னுருவி ற்றாருவன மேவியே - யன்னமென
வெய்தமோ கித்தீ ரியற்பகையார் பாரிக்கு
340 மையலாய் நல்கென்று வந்திரந்தீர் - வெய்ய
சிலைமறையோன் றேவி திருவழகு நோக்கி
341 யுலையின் மெழுகா யுழன்றீ - ரிலகு
மழுவாள ரேயிவண்மேல் வன்பழியுண் டோவண்
342 டுழுதா ரிவளுக் குதவிற் - பழுதாமோ
வென்று மடவா ரெடுத்துரைப்ப நல்குவர்போன்
343 மன்றி லுகந்தோர் மறுகொழிந்தார் - குன்றச்
சிறுகான் மெலவீசிற் றீயொக்குந் திங்கள்
344 மறுகா மெலிய மருவுஞ் - செறியுந்
திரையாழி யோதை செவியிற் றெறுமால்
345 வரவோல மிட்டு மறுகுற்ற - கரியகுயில்
பூம்பாயல் சற்றும் பொருந்தாது சந்தனமுந்
346 தேம்பாய்பன் னீரெனக்குத் தீயொக்குங் - கூம்பி

யெழுந்தமுலை பசக்கு மென்றிவை யாவு
347 மொழிந்து பரவசமாய் மோகத் - தழுந்து
மடமங்கை மீதின் மதவேள் முனிவி
348 னுடலெங்கு வெம்பகழி யுய்த்தான் - கொடியன்னாள்

மடந்தை

பின்னு மொருத்தி மடந்தை பெருந்தவத்தோர்க்
349 கின்ன லிழைக்கின்ற வேந்தெழிலாள் - துன்னும்
புளினக் கரைபாற் புணரிக்கட் டோன்று
350 நளினத் திருக்குமட நங்கை - தளிரியலா
ளையார் மனமிளக நான்முகத்தோன் பூவுலகில்
351 கையாற் படைத்த கனிவனிதை - கைபெற்ற
சேணில் வருங்கந் திருவர் தலைசாய்ப்ப
352 வீணை யிசையினின் மேவுகுயில் - காணுவினை
வென்றிக் கழைவணங்கி மேனாளரற் பொருதோன்
353 கன்றிக் கலங்கிக் கரங்கூப்பி - நின்று
பரவிப் பரவிப் பதயுகத்தை யென்பா
354 லிரதி யுருநீ யதிகமென்று - விரகங்
கொளவுதிக்குங் கோதை குலிசன் சரீரம்
355 புளகந் தரமொழியும் பூவை - யளவற்ற
மையல் பெருக்கு மருந்து புவனத்தி
356 லெய்த வரிய ரசகுளிகை - யுய்யவரு
மாரமுதம் யாரு மழியாப் பசுந்தேறல்
357 பேரழகி னான்மிக்க பெண்ணணங்கு - கூரும்
பொதும்ப ரிளங்கோட்டிற் பூவண்டு தண்டேன்
358 றதும்ப விரியுஞ் சலசம் - பதங்கனார்
காலை யுதிப்பக் கதிர்பரக்குந் தன்மைபோற்
359 கோல மணிபிழைத்த கோலத்தாற் - சால
வெழில்கொண் டகிலாவி யேய்ந்து தகரம்
360 புழுகு வருடிப் புதிய - கழுநீருந்

சாதி நறும்போதுஞ் சண்பகமுங் கந்திக்குங்
361 கோதை புனைந்த குழலினாள் - தாதிலகு
மிந்திர நீலக் கொடிநல் லிளைஞர்க
362 ணைந்துருகப் பார்க்கு நயனத்தாள் - கந்தஞ்
செறிந்த மலர்க்குமுதச் செவ்வாயில் விள்ளா
363 நறுந்தளவங் காட்டு நகையாள் - பிறங்க
லெனப்பணைத்து விம்மி யிறுகி யிளைஞர்
364 மனத்தருக்கு மாற்றி மதமாத் - தனைக்கறுவிச்
சாந்தந் திமிர்ந்து தரள வடம்பிறையி
365 னேந்தி யிளகு மிளமுலையாள் - மாந்தளிரின்
வண்ண மெனுஞ்சாயன் மாத ரொடுமொங்கு
366 தண்ணம் புனலாடச் சார்குவாள் - சுண்ணந்
திமிர்ந்து முலைப்பாரஞ் செறிய மருங்குல்
367 சுமந்து பொருமற் றுவளக் - கமஞ்சூன்
முகிலி னிறங்கனிந்து மூசு மணநா
368 றகிலின் புகையோ டளாவி - நிகரி
லளகஞ் சரிய வணிநுதலின் முத்தி
369 னிளரூந் துளிமுலையி னெய்தத் - தளிரடியிற்
செஞ்சிலம்பு கொஞ்சத் திகழ்கிண் கிணியார்ப்ப
370 வஞ்சிறையின் செங்கா லனமென்ன - வெஞ்சமரில்
வெற்றி மிகும்பகழி வேள்வணங்க மெல்லநடந்
371 துற்ற தடங்கரையி னூடேறி - முற்றுந்
தனித்தனியே பார்த்தாள் தண்ணங் கயத்துப்
372 புனற்கமல வண்ணப் பொகுட்டிற் - கனற்குழாம்
வைகு மழகு மதுவுண்டு பண்பாடித்
373 துய்ய களிவண்டு சூழ்வதுவுஞ் - செய்ய
கழுநீரும் புண்டரிகக் காடும் முருகு
374 பொழிநீல மும்மாம்பற் போதுங் - குழுமிப்
பெருகும் பரிமளமும் பின்னும்பார்த் தெங்கோ
375 னுருவிற் பொலிந்தசில வுண்டு - கருநீலங்

கண்டத்துக் கொப்பாங் கனக நிறக்கமலந்
376 துண்டத்துக் கொப்பாகச் சொல்லலாம் - விண்டு
சிவந்தகழு நீர்செங்கைத் தீயெனலா மின்னி
377 ருவந்த சடைக்கங்கைக் கொப்பாங் — கவந்தனிற்
றுன்னுந் துகிர்க்கோடல் சுற்றுஞ் சடைக்கிணையா
378 மென்ன நினைந்திருக்கு மெல்லைக்கண் - பொன்றிகழ
வோங்கும் பதாகை யொளிர்மக வான்சிரத்திற்
379 றாங்குங் கிரீடந் தனையொத்துப் - பாங்கிற்
சிகர மிலங்கச் செழுந்தமனி யத்தி
380 னிகரில் கவிகை நிமிரப் - புகரி
லருண னிறப்படா மாதவனக் காலை
381 யிருளகல வுற்றெழுந்தா லென்ன - நிரையிற்
பதிக்கு முழுமணியின் பத்தியாற் சோதி
382 யுதிப்ப தெனக் கொடுங்கை யுற்று — மதிப்பரிய
செக்கர் விதிப்பச் செறியு மணியொலிப்ப
383 விக்கயங்க ளெங்கு மெழில்காட்ட - மிக்க
சகத்தி லதிபாரந் தானென் றுரகன்
384 றிகைப்ப நடக்கும்பொற் றேரி - லுகைத்துப்
பரந்த முகிலின் பணைமுரச மார்ப்பப்
385 புரிந்து திருநீறு பூசிக் - கரங்கூப்பி
யன்பர் குழாங்க ளரகரவென் றொலிப்பப்
386 பொன்புவியில் வானோர் புடைசூழ - வென்புருகி
வண்ணச் சுதையின் வடிவந் தனையெடுப்பக்
387 கண்ணினாற் போற்றுங் கடவூரன் - விண்ணிரவி
சீத மதியுந் தவழத் திகழ்மாட
388 வீதி யிடையே விளங்குதலும் - மாதருமங்
குற்றாள் கரங்குவித்தா ளும்பர் பெருமானே
389 சற்றே யிரங்கித் தளராயோ - பொற்றோகை
யொக்கு மலைப்பாவைக் கொவ்வேனோ நீர்முடிமேல்
390 வைக்கு மவட்கென் வடிவுண்டோ - தக்கவர்தம்

பன்னியரைக் கைப்பிடித்தீர் பாதகமும் பாராமன்
391 முன்னியவர் தம்மை விரும்பீரோ - துன்னும்
விகாரத்தை மாற்றி விரகர்க் கினிய
392 னகோரத்தை யாற்றி யருளீர் - தகாதுமக்கி
தென்றாள் வெதும்பி யிரங்கினா ணெட்டுயிர்த்து
393 நின்றாள் மற்றொன்று நினைந்திலா - னன்று
புரப்பான்போ லாயிழைபாற் புன்முறுவல் செய்து
394 சிரப்பான் மதியுடைய செம்மல் - கரப்பான்போ
லம்மருகு நீங்கி யயன்மருகு போதலுற
395 விம்மா துயருற் றிரங்கினாள் - வெம்முனையிற்
றாக்குமத வேளுஞ் சீரமுழு தம்பகழி
396 கோக்கும் படிமுலையைக் கொண்டெய்தா - னோக்கிச்
சிலதியரு மன்னையருஞ் செஞ்சொற் கிளியை
397 யலமரலென் றாகத் தணைத்தே - யிலகியதம்
மாளிகையி லெய்தி மலர்சேர்மஞ் சத்திருத்தி
398 மூளுவிர கத்தான் முளைத்தகனன் - மீளப்
புனிதமரு வீசுங்கர்ப் பூரத்தி னோடு
399 பனிநீ ரளாவிப் படர - மினிதரைத்துக்
கோரோ சனைகுங் குமப்பூ மிகக்கலந்து
400 வாரார் முலையில் வனைந்திட்டார் - தீராமற்
றாதிற் பொலிந்தவருந் தண்டா மரைமுகத்திற்
401 சீதப் பனிநீர் தெளித்திட்டா - ரோதத்தின்
வெண்டரளம் பூட்டினார் வீசுமலை யச்சிறுகா
402 லண்டிவர வூடே யனந்திறந்தார் - வண்டுபுனை
மென்கையா ராலவட்டம் வீசினா ரிவ்வாறு
403 நன்குடைய மாதர் நலத்தாற்றி - மின்புரையுஞ்
சிற்றிடையாள் யாவையுந் தீர்ந்திட்டாண் மற்றொருத்தி

அரிவை

404 யற்புத மான வணியரிவை - விற்கரவேள்
கண்களிக்க வந்த கருவூலங் காமரசம்
405 பண்களிக்கு மின்சொற் பசுந்தோகை - பெண்க

ளரசு விரக வனன்மூளத் தோன்று
406 முரசு பணிப்பூ ணுருவம் - வரகமல
மின்னுக் கிடந்திலக மின்னோர்க்கு மேப்பட்ட
407 வன்னப் பெடைநிகரு மாரணங்கு - துன்னரிய
நற்றவர்தாம் பேரின்ப நாடாமற் சிற்றின்ப
408 முற்றுருவ மாட்டு மொருகோதை - கற்றவர்கள்
பண்ணு மதநூல் பகுத்தறியும் பைங்கிள்ளை
409 யின்னமுத மூற்று மிசைவண்டு - பொன்னவிருங்
காந்தியெனத் தன்மேனி காட்டிக் கலைதேறு
410 மாந்தருக்கு மால்பூட்டு மாமாது - பூந்தவிசிற்
பாவைக்கு மேலாமிப் பாவை யெனக்கரியோன்
411 மேவக் கனிந்ததோர் மின்னிடையாள் - காவின்
மணநாறுங் கூந்தன் மடவார்தற் சூழ
412 விணையாது மின்றி யிலகும் - பணியொளிர
வாடகத்தி னாற்செய் தரவின் மணிபதித்த
413 மேடை யதனில் வியந்தேறி - யோடை
புனையுங்காற் கமலப் பொன்னிகரு மின்னா
414 ரினிதி னிசைவீணை யேந்தி - மனமுருக
வெண்ணான் கிராகத் தியல்பு தவறாமற்
415 பண்ணார் குயிலினம்போற் பாட்டிசைப்ப - வுண்மகிழ்ந்து
பாடும் விறலியர்க்குப் பைம்பொற் பசும்பூணு
416 மேடகமு மாமணியு மீந்திட்டுக் - கூடு
புளகமுலைப் பாங்கியர்கள் போற்ற வுறையு
417 மளவிறிசை யெட்டு மதிரத் - துளிமுகிலி
னைந்து முரசந் துவைப்ப வருந்தவத்தோர்
418 நைந்துருகி யன்பா னனிபரவ - வந்தகனைக்
கன்றி யெழுந்து கழற்றுள் கொடுசாடி
419 யென்றும் பதினா றெனுமாயு - ளன்றுதவி
யம்மா தவனை யளிக்குந் திருக்கடவூ
420 ரெம்மான் மணிமறுகி லெய்திடலு - மிம்மாது

பதயுகத்தில் ரத்ன பரிபுரங்க ளார்ப்ப
421 மதிநுதலின் வெண்டரள மல்கக் - கதுவச்
செங்கட் கயல்பிறழச் சிற்றிடையார் தள்ளாட
422 வங்கட் பெருமா னயன்மேவித் - திங்கட்
பிறையமுதங் கான்று பெருகு முடியு
423 மறிகுலவுந் தண்டா மரையுஞ் - சிறியமின்னு
மகிழ்ந்துறையு மோர்பங்கும் வானோ ரெவரும்
424 புகழ்ந்துபர வுஞ்சரணப் போது - மிகுந்த
கண்ணு மனமுங் களிப்பத் தனைநோக்கித்
425 தண்ணங் கமலப்பொற் றாள்பணிந்தாள் - வண்ணங்
கூறு மொருபாற் குலாவு மவளன்றிப்
426 பாரின் மடவாரைப் பாரீரோ - சீருரைய
கல்லா லுவந்த கனவிரதம் போமென்றோ
427 நல்லார் முகம்பார்க்க நாணுற்றீ - ரில்லார்
தாவென் றிரக்கநீர் தாவென்றோ வானாடர்
428 கோவென்றிவ் வீதி குறுகினீர் - பாவையரை
வேண்டா தவர்போல் விழிகளுற் றும்பாரீ
429 ராண்டா ரெனும்பேர்க் கழிவன்றோ - வீண்டாளைக்
கொண்டசுகர் போற்றுங் குருவாகி னோமென்றோ
430 வொண்டொடியார் காத லொழிந்திட்டீர் - பண்டு
குன்றத் தனுவைக் குனிக்கும் புயக்குவட்டிற்
431 கொன்றைத் தொடையுதவ மாட்டீரோ - வின்று
விரக விடாய்தீர்ந்து வெம்பி யயர்ந்தா
332 ளரிவை துயர மறிந்து - புரிகுழலார்
தாங்கிக் கரத்தாற் றழுவி யவளோடு
433 மோங்குந் தனிமாடத் தூடணைந்தார் - பூங்கணைக
ளேவினா னவ்வே ளிவளு மிகத்துயர
434 மேவினாள் காதன் மிகச்சோர்ந்தா - ளாவி
பனிநீர் பொழிந்து பசுங்குழவித் தென்ற
435 லினிதூர வாலவட்ட மேந்தி - யினிதாகத்

தேற்றத் தெளிந்தாளத் திண்டே ருவந்தூரு
436 மேற்றினு னோர்வீதி யேகினன் - தோற்றிப்
பொருப்பிற் றிகழுமுலைப் பூவை யொருத்தி
437 திருப்பொற்பின் மிக்க தெரிவை - பெருத்த

தெரிவை

சிலையும் பசும்புயலுந் திங்கட் கொழுந்து
438 மிலகியதார் நீலத் திணரு - மலகில்
மாதளையின் முத்து மதுரப் பசுந்தேனுந்
439 தாதளவுஞ் சேதாம்பற் றண்போதும் - பேதமற
வொன்றிப் பொலிந்தாங் கொளிரும் வதனத்தாள்
440 தென்றற்றே ருருஞ் சிலைமாரன் - வென்றிபெற
விரகவிகா ரத்தால் வெதும்பத் தளிர்க்குஞ்
441 சுரதாதி நல்குமொரு தோகை - விரிதருநற்
றுத்திப் பணமுடியிற் றோன்றுமும் மாணிக்க
442 மத்திக்குட் டோன்றி யவிர்பவள - பத்தியா
யன்று வகுத்த வயனூர்தி யைக்கடிந்து
443 வென்ற நடையெகின மென்போடு - என்றும்
பிஞ்சுதவழ் வேணிப் பெருமான் வரையெனலாய்
444 மஞ்சு தவழும்வளர் மாடத்தி - னஞ்சென்ன
கங்குன் மதிசூழ் ககனத் துடுவினம்போ
445 லங்கனையார் தற்சூழ்ந் தடிபரவச் - செங்கமல
மலர்மெல் லடிசேப்ப வஞ்சி மருங்குல்
446 குலவுங்கால் வீசுங் கொடிபோ - லலமர்
தொசியப் பிடியெகின மொப்ப நடந்தாங்
447 கிசையு மணிமேடை யெய்தி - வசியமலர்
தாராட்டுங் கூந்தலார் தாம்வினவச் சித்தசநூல்
448 பாராட்டு மந்தப் பருவத்திற் - சீர்காட்டும்
பச்சிளந் தேன்பொழியும் பங்கே ருகத்தோன்செய்
449 முச்சகமுங் காக்கு முதல்வனர் - மச்சுகந்த
தேரார் கடவூரார் திருமறுகி லெய்திடலும்
450 வாரார் முலைமாதர் வந்தார்கள் - சீரான

பேரிளம்பெண்

பேரிளம் பெண்ணொருத்தி பெய்யும் வளையிழந்து
451 பாரில் விழுந்தாள் பதைபதைத்து - நேரில்
செவிலியவள் கண்ணுற்றுச் செங்கையி னாலணைத்துப்
452 பவளக்கா றன்னிற் படுவித்துத் - தவளநிறச்
சாமரைகள் வீசச் சரீரம் வெதும்பித்
453 தேமாவின் றென்றலி னாற்றிளைத்துக் - கோமான்
மார்க்கண்டர்க் காக மனமிரங்கி வந்த
454 சீர்க்கொண்டல் சீரடியைச் சிந்தித்தாள் - பார்க்க
ணிறைந்த களிப்புற்றா ணின்றபெருங் கீர்த்தி
455 சிறந்த வளத்தோடுஞ் செல்வ - மறந்திகழுந்
தேய நிலைநிற்பச் சீமான் கடவப்போய்
456 ஞேயதிருத் தேர்நிலையி னின்றதாற் - சேய
கனிவாய் மடந்தையர் கண்டன்ன சொல்லார்க்
457 கினிவா யருளை யிசைத்து - முனியார்
கடையூரான் முன்னுங் கடவூரா னெங்கட்
458 குடையூரான் போந்தா னுலா.

நூற் சிறப்பு.

இந்நூற் படித்தா ரெழுதினா ரேத்தினார்
தன்னடியைச் சேரத் தயாவருளி - முன்னோனல்
லாசிகள் கூறி யடைந்தான் திருக்கோயிற்
காசினியோர்க் கோங்கக் களி.

திருக்கடவூருலா முற்றிற்று.